<u>குளித்தலை நகராட்சி</u>

29.10.2021.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.ப.சுப்புராம் அவர்களின் 20.09.2021 முதல் 30.09.2021 (செப்டம்பர்–2021) வரையிலான தினசரி நாட்குறிப்பு மற்றும் அக்டோபர்–2021.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர்–2021ஆம் மாதத்தின் (01.09.2021 முதல் 19.09.2021 வரை ஆணையர் பொறுப்பு) தினசரி நாட்குறிப்பு மற்றும் அக்டோபர்–2021.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான மணப்பாறைரோடு பிரிவு வாளாந்தூர்ரோடு பகுதியில் வார்டு–C, பிளாக்–24, நகரளவை எண்.25/5, 25/6, 26/5 (பழைய புல எண்.192/4B, 192/6, 184/5)–இல் உள்ள 3.225 ஏக்கர் இடம் நகராட்சி நில அளவை பதிவேடுகளில் கல்வி உபயோக நில பயன்பாட்டில் உள்ளது.அதனை குடியிருப்பு உபயோக நில வகைப்பாட்டிற்கு மாற்றம் செய்ய நில உபயோக மாற்றத்திற்காக நகராட்சி கருவூலகத்தில் நில அபிவிருத்தி கட்டணம் ரூ.13200/–ஐ, சலான் எண்.083/01/1/21–22/0002365, நாள்– 25.10.2021இல் மனுதாரர் திரு.அ.மாதேஸ்வரன் என்ற பெயரில் செலுத்தியுள்ளார். மனுதாரர் நில உபயோக மாற்றம் கோரிய இடம் வார்டு–C, பிளாக்–24, நகரளவை எண்.31இல் உள்ள இடத்திற்கு நகரளவை ஆவணங்களின்படி அணுகுசாலையாக வாய்க்கால்கரை, வாய்க்கால் மற்றும் வாளாந்தூர் செல்லும் தார்சாலை அமைகிறது.

எனவே, மனுதாரரின் விண்ணப்பத்தினை உரிய மேல்நடவடிக்கைக்காக நகர் ஊரமைப்பு துறை, சென்னைக்கு, நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர், கரூர் வழியாக அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1428/2021/பி2.

பொருள்– 04. குளித்தலை நகராட்சியின் 2020–2021.ஆம் நிதியாண்டின் ஆண்டுக் கணக்கினை தணிக்கைக்கு உட்படுத்த ஏதுவாக கணக்கு தலைப்பு வாரியாக வருடாந்திர கணக்கினை தயாரிக்கும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் 28.10.2021 அன்று இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| வ. எண்.<br>விபரம்<br>நிறுவனத்தின் பெயர்<br>விலைப்புள்ளி தொகை<br><br>1) 2020 – 2021. ஆம் ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் பணி<br>1). திரு.சக்திவேல், வருடாந்திர கணக்கு / வரி ஆலோசகர், வையாபுரிநகர், கரூர்.<br>ரூ.95,000/–<br><br>2). திரு. ஜெய்குமார், வருட | | | |

மேற்கண்ட நிறுவனத்தில், திரு.ஜெய்குமார், கரூர் அவர்களின் குறைவான விலைப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு– | ஏற்கலாம். செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

(ந.க.எண்.1452/2021/பி1)

——————

# குளித்தலை நகராட்சி

29.10.2021.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 258 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 259 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 260 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 261 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.